விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 02 செவ்வாய்க்கிழமை (16.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 28

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# அரசு-முஸ்லிம் காங்கிரஸ் இணைவுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கை தயாரிப்பு

## கட்சிக்கூட்டத்தில் நேற்றுத் தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கத்தில் இணையவுள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது கொள்கைகள் அடங்கிய புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை தயாரிக்கவுள்ளது.

நேற்று மாலை நடைபெற்ற அக் கட்சியின் உயர் மட்டக் கூட்டத்தில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கட்சியின் கொள்கைகள், எதிர்கால நடவடிக்கைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்படவுள்ள இப் புரிந்துணர்வு உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப் படும் என தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வந்தாறு மூலைப்பிரதேசத்தில் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான தேசிய தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் 10 மணியளவில் தமிழீழ விடுதலைப்புலிகள் படையினர் மீது சிறிய ஆயுதங் (04 ஆம் பக்கம் பார்க்க)


## யாழில் கைது செய்யப்பட்ட ஐவரை விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

வெடி பொருட்கள் மற்றும் ஆயுதங்களை தம் வசம் வைத்திருந்ததாக கூறி யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட 5 பேரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவின் பொலிஸார் இவர்களை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று (04 ஆம் பக்கம் பார்க்க)

## சதாமின் சகோதரன், முன்னாள் நீதிபதி இருவரும் நேற்று தூக்கிலிடப்பட்டனர்



அவாத் ஹமீது அல்-பாந்தர் பர்சான் இப்ராகிம்

(பாக்தாத்)

சதாம் ஹூசைனின் சகோதரரும், முன்னாள் நீதிபதியும் நேற்று அதிகாலை ஈராக்கில் தூக்கிலிடப்பட்டனர். சதாம் ஹூசைனுக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டு 16 நாட்கள் கழிந்து இவர்கள் இருவரும் தூக்கிலிடப் பட்டுள்ளனர்.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைன், அவரது சகோதரர் பர்சான் இப்ராகிம், முன்னாள் நீதிபதி அவாத் ஹமீது அல்-பாந்தர் உட்பட சிலர் துஜெயில் என்ற இடத்தில் 148 ஷியா முஸ்லிம் பிரிவு மக்களை கொலை செய்த வழக்கில் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டனர்.

இவர்களில் சதாம் ஹூசைன், பர்சான் இப்ராகிம், முன்னாள் நீதிபதி அவாத் ஹமீது அல்-பாந்தர் ஆகியோருக்கு பாக்தாத் நீதிமன்றில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து மூன்று பேரும் மேல்முறையீடு செய்தனர். ஆனால் அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 30 ஆம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில்-ஜனாதிபதி இன்று சந்திப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இன்று சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பு இன்று முற்பகல் 10 மணிக்கு அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஐக்கிய தேசியக்கட்சிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்பாட்டின் பிந்திய அச்ச நிலை தொடர்பாக பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தில் இணை வதை வெளியாகியுள்ள தகவலை அடுத்து புரிந்துணர்வு உடன்பாடு குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-9)



அவாத் ஹமீது அல்-பாந்தர் பர்சான் இப்ராஹிம்

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைன், அவரது சகோதரர் பர்சான் இப்ராகிம், முன்னாள் நீதிபதி அவாத் ஹமீது அல்-பாந்தர் உட்பட சிலர் துஜெயில் என்ற இடத்

இதை எதிர்த்து மூன்று பேரும் மேல் முறையீடு செய்தனர். ஆனால் அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 30 ஆம் (04 ஆம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தில் இணை வதை வெளியாகியுள்ள தகவலை அடுத்து புரிந்துணர்வு உடன்பாடு குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச-9)

## யாழ்ப்பாண இளைஞன் திருமலையில் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று மாலை 6 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் யாழ். உரும்பிராயைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை றம ணன் என் இனங்காணப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப இளைஞன் வேலையில் இருந்து வீடு திரும்பிய போது ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ந:பர் ஆயுதாரிகளை கண்ணுற்றதும் கஸ்கிசன் வீதியினுள் பாதுகாப்புத் தேடி ஓடியதாகவும் எனினும் அவரை ஆயுததாரிகள் சுட்டுக்கொன்றுவிட்டுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ச-5)

# ஒரே இரவில் 10 வீடுகளில் ஒருகோடி ரூபா பெறுமதியான நகைகள் துணிகரத் திருட்டு

## நல்லூர் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஒரே இரவில் தொடர்ச்சியாக பத்து வீடுகளில் ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகள் ஆயுத முனையில் திருடப்பட்டுள்ளது. இத் துணிகரத்திருட்டு நேற்று முன்தினம் இரவு 11.30 மணி முதல் நேற்று அதிகாலை 3 மணிவரை நல்லூர் மற்றும் யாழ்.புறநகர் பகுதிகளில் இடம் பெற்றுள்ளது.

நல்லூர் செட்டித்தெரு வீதியில் மூன்று வீடுகளில் 50 இலட்சம் பெறுமதியான நகைகளும் மற்றும் றக்கா வீதியில் மூன்று வீடு ...ள் ,சோமசுந்தரம் வீதியில் இரண்டு வீடுகள், கைலாசபிள்ளையார் கோயிலடியில் இரண்டு வீடுகளாக ஏழு வீடுகளிலும் 50 இலட்சம் பெறுமதிக்கும் மேலான நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வாள்கள் கொட்டன்கள் மற்றும் சிறிய ரக துப்பாக்கிகளுடன் முகத்தில் கறுப்புத்துணி கட்டியவாறு கறுப்புக் காற்சட்டை மற்றும் கறுப்புச் சேட் அணிந்து வானில் வந்தவர்களே இத் திருட்டை (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டடத் தொழிலாளர்கள் இருவர் அக்கரைப்பற்றில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை அக்கரைப்பற்றில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு கட்டடத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பில் உள்ள கண்ணகிபுரத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இரு மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் இத்துப்பாக்கிச்சூட்டினை நடத்தியுள்ளதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் தீர்வுத்திட்டத்தை ஆராய ஜாதிக ஹெல உறுமய குழு நியமிப்பு

(கொழும்பு)

அனைத்துக்கட்சிக்குழுவின் தலைவரான திஸ்ஸ விதாரணவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தை ஆராய்ந்து தமது கருத்துக்களை தெரிவிக்க ஜாதிக ஹெல உறுமய ஒரு குழுவை நியமித்துள்ளது.

திஸ்ஸ விதாரணவின் தீர்வுத் திட்டம் தொடர்பான கருத்துக்களை எல்லாக்கட்சிகளும் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். எனவேதான் எமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு நாம் குழுவை அமைத்துள்ளோம் என்று கட்சியின் உதவிச் செயலாளர் உதய கமனபில தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# மகேஸ்வரன் எம்.பியின் கப்பலில் விமான உதிரிப்பாகம் மீட்பு!

## தண்டனை வழங்கக் கோருகிறது ஹெலஉறுமய

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் கப்பலில் விமான உதிரிப்பாகம் மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருக்கு கடும் தண்டனை வழங்கு வேண்டுமெனவும் ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு தென்னாபிரிக்காவிலிருந்து கொழும்புக்கு வந்த கப்பலில் விமானத்தின் பின் பாகம் ஒன்று கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கிம்ரம் பனாமா என்ற கப்பல் மகேஸ்வரன் எம்.பிக்குச் சொந்தமானது. அந்த வகையில் விடுதலைப்புலிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஜனநாயக முகமூடி அணிந்த பயங்கரவாதி என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் ஒமல்வே சோபிததேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் குற்றச்செயலைப் புரிந்த அவரை நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கி அவரது சொத்துக்களை தேச உடைமையாக்க வேண்டுமெனவும் ஹெல உறு மய வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை இச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த மகேஸ்வரன் எம்.பி.,

கப்பலில் விமானப் பாகம் இருந்த குற்றச்சாட்டுத் தொடர்பான சுயாதீன விசாரணைக்குத் தான் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள இனவாதக் கட்சியின் குற்றச்சாட்டு என் மீது சேறுபூசும் நடவடிக்கையாகவே உள்ளது. விமானத்துக்குரிய எந்தவிதமான உதிரிப்பாகங்களும் எனது கப்பலில் இல்லை.

ஆனால் நான் கப்பலை வாங்கும் முன்னர் இந்தக் கப்பலில் ஒரேஒரு உதிரிப்பாகம் இருந்தது. அது ஒரு சிறிய தகட்டுத்துண்டு. அதனை வைத்துக் கொண்டு அது விமான உதிரிப்பாகம். அது விடுதலைப் புலிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. விடுதலைப்புலிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே நாங்கள் கப்பல் கொம்பனி நடத்துவதாகவும் ஹெலஉறுமய தெரிவித்த குற்றச்சாட்டை தான் மறுப்பதாகவும் கூறினார்.

விமானப்படை, கடற்படை, பொலிஸ் மற்றும் இராணுவம் என்பன விசாரணைகளை நடாத்தி வருவதாகவும் அதன் பின் உண்மை வெளிவரும் என மகேஸ்வரன் எம்.பி தெரிவித்தார். இதேவேளை கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் ஜாதிக ஹெலஉறுமய எம்.பிகளின் ஆடைகள் கழற்றப்பட்டுத் தாக்கப்பட்ட போது தான் மட்டுமே அவர்களைக் காப்பாற்றியதாக மகேஸ்வரன் எம்.பி.சுட்டிக் காட்டியுள்ளார். (ச)

## கொஹுவலப் பகுதியில் இருபது பேர் கைது

(கொஹுவல)

கொஹுவல பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சுமார் 20 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்சமயம் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக கொஹுவலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-9)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொது சுகாதாரப் பிரிவினரால் வளர்ப்பு நாய்களுக்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து வலி.கிழக்குப் பிரதேச சபையினரின் அனுசரணையுடன் ஏற்றப்பட்டு வருகின்றது.

13 ஆம் திகதி சனிக்கிழமை வாதரவத்தைப் பகுதியில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து எதிர்வரும் சனிக்கிழமை வரை ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலிப் பகுதிகளில் ஏற்றப்படவுள்ளது.

இதேவேளை வலி.கிழக்குப் பிரதேச சபையினரால் நாய்களுக்கான உரிமத் தகடு விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## இந்திய மீனவர்கள் 10 பேர் மன்னார் கடற்பரப்பில் கைது

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் பத்துப் பேர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமன்னாருக்கு அருகே இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்தபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

அவர்களிடமிருந்து மோட்டார் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. எனினும் கைது செய்யப்பட்டவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் இல்லை என தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்கள் சட்டவிரோதமாக இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## குறைகேள் அரங்கம்

### கிளைக்குழுக்கள் வரம்பை மீறுகின்றனவா?

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்கள் தேவையற்ற ஆதிக்கம் செலுத்துவதாகவே கருதவேண்டியுள்ளது. அவர்கள் நினைத்தபடிதான் சில முகாமையாளர்கள் செயற்படுகின்றார்கள். அவர்கள் நினைத்தவாறு நம்பர் கொடுக்கின்றார்கள். தெரிந்தவர்களுக்கு நம்பரை ஏற்கனவே கொடுத்துவிடுகின்றார்கள். தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள். அவர்களுக்கு முதலிலேயே பொருள்களையும் கொடுத்துவிடுகின்றார்கள்.

சகலருக்கும் போதியளவில்லாத பொருள்களை தமக்குத் தெரிந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் கொடுக்கச் சொல்கின்றார்கள். அவர்கள் நினைத்தால்தான் பொருள்களை வாங்க முடியும். ஒரு சில கிளை குழுக்கள் அதிலும் ஒரு சில உறுப்பினர்கள் காலம் காலமாக குழுவில் இருக்கின்றார்கள்.


மாற்றம் இடம்பெறும் போதெல்லாம் ஏதோ ஒருவகையில் கிளைக்குழுவில் இடம்பிடித்து யார் முகாமையாளராக வந்தாலும் சரி எந்த மாற்றம் நடந்தாலும் சரி அவர்களைத் தம் கையில் போட்டுக் கொண்டு உதவுவதாகச் சொல்லி தம் காரியத்தை செவ்வனே பார்த்து விடுவார்கள்.

சங்க முகாமை எந்த ஒரு நடவடிக்கையும் கிளை முகாமையாளர் மீது எடுக்க முனையும் போதெல்லாம் அவர்களுக்காக வக்காலத்து வாங்கி அவர்களை காப்பாற்ற முயல்வார்கள். சோழியர் குடும்பி சும்மா ஆடுமா? அப்போதுதானே தம் இஷ்டத்திற்கு அவர்களை ஆட்டுவிக்க முடியும். அவர்களும் திறந்த வெளிச்சிறைக் கைதியாகிவிடுவர்.

அவர்களது தில்லுமுல்லுகள் மறைக்கப்பட்டுவிடும். கிளைக்குழுக்கள் கிளை முகாமையாளர்களுக்கு உதவியாகவிருக்க வேண்டும். உபத்திரமாக இருக்கக் கூடாது. நிர்வாக முகாமைக்கு ஆதரவாக இருக்க வேண்டும். இடைஞ்சலாகவிருக்கக் கூடாது. கிளைக்குழுக்கள் செயல் இழந்த நிலையிலும் மதிப்புக் கொடுக்கும் நிர்வாகத்துக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். உறுதுணையாகவிருக்க வேண்டும்.

பாவனையாளர்களுக்கு துரோகமிழைக்க கூடாது. ஊரவஞ்சகம் செய்யக் கூடாது. நம்பியிருக்கும் அங்கத்தவர்களுக்கு வழிகாட்டிகளாகவிருக்க வேண்டும். தன்னலம் கருதாது சமூக சேவையாற்ற வேண்டும். சுய நலத்தில் பொதுநலமா? சிந்தித்துச் செயற்படுங்கள்.

கூட்டுறவாளன்



ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் மக்கள் வங்கியின் மாணவர் சேமிப்பு அலகு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வைபவத்தில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிராந்திய பொதுமுகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா, சுன்னாகம் மக்கள் வங்கியின் முகாமையாளர் எம்.சந்திரகாந்தன், கல்லூரி அதிபர் சிவாஜி ஆகியோருக்கு மலர்மாலை அணிவித்து மாணவர்கள் அழைத்துச் செல்வதனைப் படத்தில் காணலாம்.

# 2007 புத்தாண்டு பலன்கள்




*நினைத்ததை அடையாமல் விடமாட்டேன் என்ற மனஉறுதியை உடைய மகரராசி நேயர்களே!*

உங்களின் ராசிநாதன் திக்பலம் பெற்று ராசியைப் பார்ப்பதால் திட்டமிட்ட பணிகள் உடனுக்குடன் நடந்தேறும் உங்களின் புகழும் செல்வாக்கும் குறையாமலிருக்கும்.

குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்தி மகிழ்வீர்கள். பூரண சுபரான குருபகவான் உங்கள் ராசிக்கு லாபஸ்தானத்தில் அமர்ந்து தைரிய ஸ்தானத்தையும் பஞ்சமஸ்தானத்தையும் களத்ர ஸ்தானத்தையும் சனிபகவானையும் பார்ப்பது சிறப்பு.

இதனால் கொடுத்த கடன்கள் வசூலாகும். வழக்குகளில் சாதகமான திருப்பங்களைக் காண்பீர்கள். மறைந்த புதன் நிறைந்த மதி, நிறைந்த நிதி என்பதற்கிணங் மறைந்த பாக்கியாதிபதியால் உங்களின் பேச்சில் வசீகரமும் சொல்வன்மையும் உண்டாகும்.

எதிர்பார்த்த சௌபாக்கியங்கள் உங்களைத் தேடி வரும். அதேசமயம் தனம், வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராகுபகவானின் அஷ்டம ஸ்தானத்தில் கேதுபகவானும் இருப்பதால் உங்களின் செயல்களில் ஏதேனும் ஒரு குறை தோன்றும்.

உங்கள் மனதில் அவசியமில்லாத சஞ்சலங்களும் குழப்பங்களும் உண்டாகி மறையும். ஆகவே மனதைக் கட்டுப்படுத்தும் பயிற்சிகளான யோகா, பிராணாயாமம் போன்றவற்றைச் செய்து வந்தால் முழுமையான வெற்றி கிடைக்கும்.

பொதுவாக இந்தப் புத்தாண்டில் புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள். முயற்சிகள் வெற்றி பெறுவதில் தடைகள் ஏற்பட்டாலும் முடிபு நன்றாகவே அமையும்.

பொருளாதாரம் சராசரிக்கும் சற்று அதிகமாகவேயிருக்கும். பயணங்களால் அனுகூலங்கள் ஏற்படும். உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகளை மேலதிகாரிகள் சற்றுக் காலதாமதத்துடன் பரிசீலிப்பார்கள்.

இதனால் கோபமடையாமல் பொறுமை காக்கவும்.ஏனெனில் முடிபு உங்களுக்கு சாதகமாகவே அமையும். அதேசமயம் பயணங்களால் அனுகூலங்களைப் பெற முடியாது.

வியாபாரிகளுக்கு முயற்சிகளுக்குத் தகுந்த லாபங்கள் கிடைக்கும். ஆனாலும் புதிய முதலீடுகளில் ஈடுபட வேண்டாம். கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாகவிருக்கவும். மேலும் கடன்கொடுத்து வியாபாரத்தை பெருக்க நினைக்க வேண்டாம்.

விவசாயிகளுக்கு மகசூல் திருப்திகரமாக இருக்கும். எதிர்பாராத பணவரவால் பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்த முற்படுவீர்கள்.

அதேசமயம் புதிய குத்தகைகளை நாடிச் செல்ல வேண்டாம். சிலருக்குப் பால் வியாபாரம் நன்றாக நடக்கும்.

இந்த ராசி, அரசியல்வாதிகளின் பெயரும் புகழும் வளரும். புதிய பதவிகள் உங்களைத் தேடி வரும். பயணங்களால் நன்மை உண்டாகும்.அனைத்து வேலைகளையும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பீர்கள்.

கலைத்துறையினருக்கு அதிக முயற்சிகளுக்குப் பிறகே ஒப்பந்தங்கள் கைகூடும். இரசிகர்களின் பாராமுகத்தால் வேதனை அடைவீர்கள்.சக கலைஞர்கள் உங்களுக்கு உதவமாட்டார்கள். எனினும் மனம் தளராது பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொண்டு செயலாற்றுங்கள்.

பெண்மணிகள் பணவரவு நன்றாகவிருப்பதால் ஆடம்பரப் பொருள்களை வாங்குவார்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். அதேசமயம் கணவரிடம் ஒற்றுமையோடு நடந்து கொள்ளவும்.

மாணவ மணிகள் படிப்பில் முழுக்கவனத்தைச் செலுத்தினால் நல்ல மதிப்பெண்களைப்பெறலாம். ஆகவே படிப்பைத் தவிர வேறு எதையும் நினைக்க வேண்டாம்.

*பரிகாரம்:- ஆஞ்சநேயரை வழிபட்டு வரவும். கோவிலில் ராம் ராம் என்று ஜபித்த படியே ஆஞ்சநேயரைச் சுற்றிவரவும்.*

(தொடரும்)

நட்புக் கொள்வதில் நிதானமாகவிருக்கவும். ஆனால் நட்புக் கொண்டபின் அதில் உறுதியாகவும் நிலையாகவும் நிற்கவும்.

–சோக்ரடீஸ்

வலம்புரி

# தன்னலம் கருதிச் செய்யப்பட்ட பொது இணக்கப்பாட்டு உடன்படிக்கை

ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படும் பொது இணக்கப்பாட்டு உடன்படிக்கை முறிவடையும் கட்டத்தில் உள்ளது.

நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு இணைந்து கொள்வது அவசியமாகவிருந்தது.

இதனை சாதித்த பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு உண்டெனக் கருதப்பட்ட போதிலும், அந்த இணைப்பை அவரே உடைத்துக் கொண்டார் என்ற பழிக்கும் ஆளாவது தவிர்க்க முடியாததுபோல் தெரிகின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஒத்துழைப்பு வழங்க ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்த போதிலும், அவரின் முதலாவது செய்தி "இனப்பிரச்சினைத் தீர்வில் மகிந்த ராஜபக்ஷவிற்கு உதவவும், கடந்த கால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவிருக்கின்றது" என்பதாகும்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் உரைக்கு ஜனாதிபதியாகப் பதவியேற்று கன்னிஉரையாற்றிய மகிந்த ராஜபக்ஷ "இனப்பிரச்சினை தீர்வில் எமக்கு யாருடைய ஆலோசனையும் தேவையில்லை" என வெட்டொன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார்.

இவ்விதம் ஜனாதிபதியின் உரை அமைந்திருந்ததால் இரு பிரதான கட்சிகளினதும் இணைவு சாத்தியமில்லை என்றே கருதப்பட்டது.

அதேநேரம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அதில் பேராசிரியர் பீரிஸை தனது பக்கம் இழுக்கும் முயற்சியே நடைபெற்றது என்பது அரசியல் ஆய்வாளர்களின் கருத்து.

இவற்றின் மத்தியில் திடீரென ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை ஏற்படுத்திய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரு பிரதான கட்சிகளின் பொது இணக்கப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தினார்.

அதனை ஏற்றுக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் பொது இணக்கப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் உடன்படிக்கையில் கைச்சாத்திட அனுமதித்தார்.

இவ்வாறு இரு பிரதான கட்சிகளுக்கிடையே பொது இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னர், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைத் தன்பக்கம் இழுப்பதில் ஜனாதிபதி மகிந்த, அதிதீவிரம் காட்டினார்.

இதுவே இரு கட்சிகளினதும் இணைவின் தெறிப்பிற்கு காலாக அமையப் போகின்றது என்பது அரசியல் ராஜதந்திரிகளின் கருத்து.

ஆக, தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இரு பிரதான கட்சிகளின் கூட்டு அவசியம் எனக் கூறிய ஜனாதிபதி மகிந்த, அதனை தன்னலத்திற்குப் பயன்படுத்தியமை துரதிஷ்டமே.

# தேசியத் தலைவரின் எண்ணத்தின் பிரதிபலிப்பை கல்வியின் மூலம் மாணவர்கள் காட்ட வேண்டும்

## இளங்குமரன் உரை

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணத்தின் பிரதிபலிப்பினைப் பாடசாலைக் கல்வி மூலம் மாணவர்கள் காட்ட வேண்டும் என்று தமிழீழக் கல்விக் கழகப்பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்துள்ளார். நேற்றுத் திங்கட்கிழமை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ச்சோலை இடைநிலைப் பள்ளி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டுஉரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர் திருநாளாம் தைத் திருநாளில் தமிழர் புத்தாண்டில் இந்தப் பாடசாலையை ஆரம்பிப்பது பெருமகிழ்ச்சியடைகின்றோம். திருவள்ளுவர் ஆண்டு 2038-வது ஆண்டு தொடக்கத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்படுகின்றது. இப் பிரதேச மாணவர்களின் கல்வியின் தேவையை உணர்ந்துதான் இந்தப் பாடசாலை உருவாக்கப்பட்டிருக்கின்றது.

பாடசாலைக்கு கல்விச் சமூகம் அனைவரது ஒத்துழைப்பும் கிடைக்கும். பாடசாலையில் திட்டமிட்ட முறையில் கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமேயானால் வகுப்பறைக் கல்விக்குப் புறம்பாக கலை, பண்பாடு, விளையாட்டுத்துறை போன்ற பல்வேறு துறைகளிலும் மாணவர்களை உயர்ந்தவர்களாக செயற்படுத்த இந்தப் பாடசாலையால் முடியும் என்றார். (ச)

# அரசுக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் தற்போது நெருக்கமான உறவில்லை

## அநுரகுமார திஸாநாயக்க கூறுகின்றார்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் உட்பட ஏனைய கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி ஆசை வந்துள்ளது. இதன் விளைவே கட்சித் தாவல்களாகும் என்று ஜே.வி.பியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தாவல்களை காரணம் காட்டி முறித்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு எந்தவிதமான உறவுகளும் தற்போது அரசாங்கத்திற்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் உட்பட பலர் அரசாங்கத்துடன் இணையப் போவதாக வெளிவரும் தகவல்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

தற்போதைய நிலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி 18 பாராளுமன்ற உறுப்பினர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 6 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜாதிக ஹெல உறுமயவின் பெரும்பாலான உறுப்பினர்களும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளப் போவதாகத் தெரியவருகின்றது.

புதிய உறுப்பினர்களின் வருகையுடன் அரசாங்கம் மகிழ்ச்சி மட்டும் கொண்டாடாமல் முக்கிய ஒரு விடயத்தையும் உணர வேண்டும். அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜாதிக ஹெலஉறுமய தவிர மேற்படி உறுப்பினர்கள் யாவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தனிப்பட்ட ரீதியிலும் அரசியல் ரீதியிலும் மிகவும் வன்மையாக விமர்சனம் செய்தவர்கள்.

அப்போது பிரதமராகவிருந்த மகிந்த ராஜபக்ஷ, சுனாமி நிதியை மோசடி செய்து விட்டதாக அதிரடியாக பிரசாரம் செய்தவர்கள். அத்துடன் இனப்பிரச்சினைத் தீர்வாக ஒற்றையாட்சி என்ற சொற்பதத்தையே நிராகரித்தவர்கள்.

முக்கியமாக ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்கள் குழுவில் இடம்பெறுகின்ற ராஜித சேனாரட்ண இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் தொடர்பாக சமஷ்டி முறையே சிறந்தது என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்.

அத்துடன் பந்துல குணவர்த்தன அரசாங்கத்துடன் முரண்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கொண்டவர். இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்கள் குழு அரசாங்கத்துடன் இணைந்தால் அது மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்திற்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தை பொறுத்தவரையில் அது தற்போதைக்கு சேதமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அரசாங்கத்துடன் புதிய உறுப்பினர்கள் இணைவது குறித்து ஜே.வி.பி. பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. காரணம் அரசாங்கத்திற்கும் ஜே.வி.பிக்கும் இடையே தற்போது நெருக்கமான உறவுகள் இல்லை. (ச)

# தமிழர்களையும் முஸ்லிம்களையும் குழப்ப காத்தான்குடி ஆயுதக் குழுக்கள் முயற்சி

## அமைதி காக்குமாறு பள்ளிவாசல்கள் சம்மேளனம் கோரிக்கை

(மட்டக்களப்பு)

காத்தான்குடி முஸ்லிம் மக்களையும் ஆரையம்பதி தமிழ் மக்களையும் அமைதி காக்கும்படி பள்ளிவாசல்கள் சம்மேளனக்குழுவின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஆரையம்பதியில் ஆயுதக் குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லிம் பயணிகளைத் தாக்கியது தொடர்பாக அங்கு முறுகல் நிலை தோன்றியுள்ளது.

தாக்குதல் அச்சத்தில் முஸ்லிம் மக்கள் காத்தான்குடிப் பள்ளிவாசலில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அண்மைக் காலமாக மோட்டார் சைக்கிள் திருட்டுக்கள், துப்பாக்கிச் சூடுகள் போன்ற வன்முறைகளை முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் காத்தான்குடியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பள்ளிவாசல்கள் சம்மேளனக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை அண்மையில் வாகரையில் இருந்து இடம்பெயர்ந்த 347 தமிழ்க் குடும்பங்கள் ஆரையம்பதிப் பகுதியில் தற்காலி கமாகக் குடியமர்ந்துள்ளனர். அதற்கு அருகாமையிலுள்ள முஸ்லிம் கிராமத்தில் ஜிகாத் குழுவினர், தமது குடியிருப்புக்களுக்கு வரும் தமிழ் மக்களை மிரட்டுவதுடன் வானத் தை நோக்கித் துப்பாக்கிச் சூட்டையும் நடத்தியுள்ளனர்.

இந்த முறுகல் நிலையை தமக்குச் சாதகமாகப்பயன்படுத்தி முஸ்லிம் மக்களின் மீதான வன்முறைகளை அதிகரித்து இடம்பெயர்ந்த மக்களின் ஆதரவைப் பெற சிலர் முயற்சித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் அதிரடிப்படையினரின் முகாமுக்குச் சென்று முறைப்பாடு செய்த போதிலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சைக்கிள்,மோட்டார் சைக்கிள்களில் செல்லும் முஸ்லிம் மக்களும் ஒலிக்குளம், பாலமுனை, காங்கேயன்ஓடை ஆகிய பகுதிகளில் தாக்கப்பட்டுள்ளனர். வன்முறைகளுக்கு எதிராக முஸ்லிம் மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பையும் கதவடைப்பையும் கடைப்பிடித்திருந்தனர்.

முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் வழமைபோல் உறவைப் பேணும்படி பள்ளிவாசல்கள் சம்மேளனக் குழுவின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்தனர். (ச-5)

# மிகின் விமான சேவைக்கு நிதி ஒதுக்க ஊழியர் நம்பிக்கை நிதியம் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்தவின் மிகின் விமான சேவைக்கு ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிதியிலிருந்து நிதி வழங்க முடியாது என்று பொது நிறுவனங்களின் அமைப்புக்கு ஊழியர் சேமலாப நிதியம் அறிவித்துள்ளது.

ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பொது நிறுவனங்களின் அமைப்பு நிதி ஒதுக்கீடு தொடர்பாக ஊழியர் நம்பிக்கை நிதியத்தை அணுகிய போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியானது பொதுமக்களின் பணம். அதனை தவறான திட்டங்களுக்குப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது. வாழ்க்கைச் செலவு 145 விகிதமாக இருக்கும் போது ஊழியர்களுக்கு 8 விகிதம் வழங்குவது எப்படி எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சாதாரணமான அபிவிருத்தி மற்றும் கட்டுமானத் திட்டங்களுக்கான அனுமதிகள் கிடைப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் போது மிகின் விமான சேவைத் திட்டத்திற்கான அனுமதி ஒரு நாளில் பெறப்பட்டதும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மிகின் விமான நிறுவனத்தின் முதலீட்டாளர்களின் பெயர்களில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினதும் திறைசேரியின் செயலாளர் கலாநிதி ஜெய சுந்தரவினதும் பெயர்கள் இருப்பதும் சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

அரசின் பாதுகாப்புச் செயலாளரும் நிதி அமைச்சின் செயலாளரும் தனியார் நிறுவனத்தின் முதலீட்டாளர்களாக எவ்வாறு இருக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ச-5)

# நெதர்லாந்து தொண்டர் நிறுவனத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பில்லை

(கொழும்பு)

நெதர்லாந்து நாட்டு தொண்டர் நிறுவனமான சோஆ என்றழைக்கப்படும் அகதிகளுக்கான பாதுகாப்புத் தொண்டர் அமைப்புக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எதுவித தொடர்புகளும் இல்லை என்பதை பாதுகாப்பு அமைச்சிற்கு தெளிவுபடுத்தியுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளதாவது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எமது தொண்டர் நிறுவனத்தின் மீது முழு நம்பிக்கை கொண்டுள்ளார். எமது பணியைத் தொடர ஊக்கப்படுத்தியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷவுடன் இது தொடர்பாக விவாதிக்கப்பட்டதுடன் விடுதலைப்புலிகளின் ஸ்ரான்லி முகாமில் இருந்த பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கஞ்சிகுடிச்சாறு பகுதியில் மாவீரர் குடும்பங்களுக்கு 500 வீடுகள் எம்மால் நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளது என்ற செய்தியும் தவறானது.

அரசின் வேண்டுகோளுக்கு இணங்கவே அங்கு 130 குடியிருப்புக்கள் இடம் பெயர்ந்த மக்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன. எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் மீது மக்களுக்கு அவ நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஒரு அரசியல் கட்சி உறுப்பினர்கள் எமது வளாகத்தில் புகுந்து எம்மை நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று மிரட்டியமை வருந்தத்தக்கது என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச)

# விடுதலைப்புலி உறுப்பினருடன் முன்னாள் பொலிஸ் அதிகாரி கைது

திருகோணமலை துறைமுகத்தின் முன்னாள் பொலிஸ் அதிகாரி இந்திக்க பெரேரா விடுதலைப்புலிகள் உறுப்பினர் ஒருவருடன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மாத்தறை உணவகம் ஒன்றில் உணவு அருந்திக் கொண்டிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்படும் போது அவரிடம் 45 இலட்சம் ரூபா பணம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிரஸ்தாப பொலிஸ் அதிகாரி விடுமுறை பெற்று வெளிநாடு சென்றதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் உறுப்பினர் திருகோணமலை செல்வநாயகபுரத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டது. (ச)

# பூசா சிறைக்கைதிகள் விரும்பினால் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவர்

## பிரதி நீதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு

காலி பூசா சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு ஏதாவது அநீதி ஏற்பட்டால் அதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். காலி பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகள் விரும்பினால் நாட்டில் உள்ள வேறு சிறைச்சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இது குறித்து கைதிகள் எமது அரசிடம் முறையிடலாம் என்று நீதி மற்றும் நீதிமன்ற மறுசீரமைப்பு பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அண்மைக்காலமாக கொழும்பு உட்பட புறநகர் பகுதியில் கைதுசெய்யப்பட்ட தமிழர்களில் பெரும்பாலானோர் காலி பூசா சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்திகள் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படும் ஒருவர் சில காலத்திற்கு சிறைச் சாலையில் தடுத்துவைக்கப்படலாம் அந்த வகையில் தற்போது அதிகமானவர்கள் காலி பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். இது தொடர்பாக கைதிகள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார். (ச)

## அரசின்...

எங்கள் கருத்துக்களை திஸ்ஸ விதாரணவின் திட்டத்திற்கு எதிரானவையாகத்தான் இருக்கும். எனினும் கட்சியின் தனது மாற்றுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஹெல உறுமயவின் குழு தலைமை ஆலோசகர் மனோகர டி சில்வா தலைமையில் பொதுச்செயலாளர் வண. ஓமல்பே தேரர், சட்டத்துறை நிபுணர் நிர்மல பெரேரா, உதய கமனபில, எம்.சி.ஜெயரட்ண ஆகியோரைக் கொண்டுள்ளது. (ச-5)

## யாழில்....

முன்தினம் ஆஜர்படுத்தினர். இவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைத்து விசரணை செய்ய பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

படையினரால் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட இந்த சந்தேக நபர்களிடமிருந்து 5 கிலோ எடை கொண்ட கிளைமோர், ரி-56 ரக துப்பாக்கிகள் உட்பட வெடிபொருள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுகின்றது. எனினும் அவர்களின் பெயர் விபரங்கள் வெளியாகவில்லை. (ச-9)

## கட்டத்...

தெரிவிக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் என்றும் சிறப்பு அதிரடிப்படையினரின் அழைப்பின் பேரில் அங்கு சென்று விட்டு திரும்பும் போது முகாமிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் இவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் கண்ணகிபுரத்தைச் சேர்ந்தவர்களான சின்னத்தம்பி தனபாலசிங்கம் (வயது 24), இராஜாராம் (வயது 22) என்றும் ஆலடிவேம்பைச் சேர்ந்த பாக்கியராஜா சசிகரன் (வயது 22) என்பவர் காயமடைந்துள்ளார் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. (ச-5)

## சதாமின் சகோதரன்...

திகதி அதிகாலை பாக்தாத் அருகே உள்ள ஒரு இடத்தில் சதாம் ஹூசைன் தூக்கி லிடப்பட்டார்.

அன்றைய தினம் அவருக்கு மட்டும் தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மற்றைய இரண்டு பேருக்கும் பின்னொரு நாளில் தண்டனை நிறைவேற்றப்படும் என்றும் அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது.

பர்சன் இப்ராகிம் மற்றும் அல்-பாந்தருக்கு இலங்கை நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. சதாம் ஹூசைனை தூக்கிலிட்ட அதே இடத்தில் தான் இவர்கள் இருவருக்கும் தண்டனை நிறைவேற்றப்பட்டது. இது குறித்து நீதிபதி முன்குவர் அல் பரோன் கூறுகையில்,

தூக்குத் தண்டனை நிறைவேற்று வதை பார்வையிட ஒருவரை அனுப்பிவைக்கும்படி அரசு கேட்டுக்கொண்டது அதன்படி ஒருவரை அனுப்பிவைத்தோம் என்றார்.

சாம் ஹூசைனின் தூக்குத்தண்டனையை வீடியோ எடுத்ததுபோல இவர்கள் இருவரையும் தூக்குத்தண்டனையை நிறைவேற்றியதை வீடியோ எடுக்கப்பட்டதா என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

ஆனால் தூக்கிலிடும்போது சதாம் சகோதரர் பர்சானின் தலை உடலில் இருந்து தனியாக வந்து விட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது குறித்து ஈராக் அரசின் செய்தி தொடர்பாளர் அலி அல் -தாபாக் கூறுகையில் மிக அரிதான சம்பவமாக தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படும்போது பர்சானின் தலை உடலை விட்டு தனியாக வந்து விட்டது என்று குறிப்பிட்டார்.

சதாம் ஹூசைன் தூக்கிலிடப்படுவதற்கு முன்பு அதிபர் புஷ்சுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதேபோல் இந்த இரண்டு பேரையும் தூக்கிலிடும் முன்பு அவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்பது தெரியவில்லை என்றார். (ச-5)

# தமிழர்கள் கைதுசெய்யப்படுவது எமது நாட்டில் அதிகரித்துள்ளது

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தலைநகர் கொழும்பிலும் மற்றும் ஏனைய இடங்களிலும் தமிழர்கள் கைது செய்யப்படுவது அண்மைய வாரங்களில் அதிகரித்துள்ளதாக இலங்கையின் தொழில் மற்றும் தொழில் பயிற்சி பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கடந்த மாதம் இறுதியில் இடம் பெற்ற இரண்டு பேருந்துக் குண்டுவெடிப்புகளை அடுத்து இந்தக் கைதுகள் அதிகரித்திருப்பதாகவும் அண்மைய வாரங்களில் இவ்வாறு கைது செய்யப்பட்ட சுமார் 300 முதல் 400 பேர்வரையிலான தமிழர்கள் பூசாவில் உள்ள இராணுவத் தடுப்பு முகாமிற்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

தற்போது பொங்கல் பண்டிகை காலமாதலால் வீடுகளுக்கு விடுமுறையில் செல்லும் தமிழர்கள் பேருந்து மற்றும் ரயில் நிலையங்களில் இவ்வாறு அதிகமாக கைதுசெய்யப்படுவதாக இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இவ்வாறான கைதுகள் அதிகமாக இடம்பெற்றுள்ள போதும் மலையத்தின் கண்டி போன்ற இடங்களிலும் மற்றும் களுத்துறை மந்துகம ஆகிய இடங்களில் கூட அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடையாள அட்டை மற்றும் பொலிஸ் பதிவு ஆகிய இல்லாதவர்கள் கைதாகுவதாகவும் ஆயினும் இந்த ஆவணங்கள் வைத்திருந்த பலர் கூட கைதுசெய்யப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் இது குறித்து கருத்துக்கூறிய இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து பேசவல்ல ஹெகலிய ரம்புக்வெல இந்த பொலிஸ் பதிவுகள் இல்லாதவர்கள் கைதுசெய்யப்படுவது நியாயம் தான் என்று கூறியுள்ளார்.

ஏனெனில் அனைவரும் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று ஏற்கனவே பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## ஒருகோடி...

மேற்கொண்டதாக திருட்டு நடைபெற்ற வீட்டு உரிமையாளர்கள் தெரி வித்தனர்.

கொள்ளையர்கள் கொச்சைத் தமிழில் கதைத்ததையும் குழந்தைகள் மற்றும் பிள்ளைகளை பணயமாக வைத்தும் துப்பாக்கி முனையில் மிரட்டியும் நகைகளை பறித்துச் சென்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த திருட்டு நடைபெற்றபோது குறிப்பிட்ட வீடுகளில் இருந்து யாழ்.பொலிஸாருக்கு 119 என்ற இணைப்பிற்கு தொடர்பு கொண்டு உதவி கோரப்பட்டதாகவும் எனினும் நேற்று இரவு வரை பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற வீடுகளில் கிராமசேவையாளர் ஒருவரினது வீடும் அடங்கியுள்ளது.

குறித்த கிராமசேவை யாளர் உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு அறிவித்தபோது அவர்கள் வரமுடியாது என தெரிவித்தாகவும் அதன் பின் குறிப்பிட்ட கிராம சேவையாளர், யாழ்.அரச அதிபருக்கு அறி வித்து உதவி கோரியதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இந் நிலையில் அரச அதிபர் 512 ஆவது இராணுவப் பிரிவினருக்கு அறிவித்துள்ளார். எனினும் இராணுவத்தினர் சம்பவ இடத்திற்குச் செல்ல முன்னர் திருடர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றதாக கூறப்பட்டது. இத் திருட்டுச் சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர்களினால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேரடியாகச் சென்று முறையிடப்பட்டுள்ளது. (ச-5)

# அம்பாறையில் வைத்து ஆசிரியர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை துறை நீலாவணைப் பகுதியில் ஆசிரியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று மதியம் இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த சத்தியமூர்த்தி கீர்த்திவர்மன் (வயது 31) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்து தனது தாயாருக்கு பொங்கல் பறிமாறச் சென்ற சமயம் சுட்டுக்கொல்லப்பட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (ச-9)

# மட்டக்களப்பில் இருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் 9.30 மணியளவில் இரண்டு பேர் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவடிவேம்பு முருங்கன் கோவில் வீதியில் ரோந்துப் பணியில் ஈடுபட் டிருந்த படையினரை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து படையினர் பதில் தாக்குதலை நடத்தியுள்ள நிலையில் இவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்டவர்கள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-9)

# அரசு-முஸ்லீம் காங்கிரஸ்...

அரசுடன் இணைவதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொள்கைகளை முன் வைத்துள்ளதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வலம்புரிக்கு அவர் தெரிவிக்கையில், கட்சியின் உச்சபீடம் நேற்றுக் கூடி அரசுடன் இணைவது தொடர்பாக ஆராய்ந்தது.

இதில் அரசாங்கத்துடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை செய்து கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கு ஐந்துபேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் அரசாங்கத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைவதற்கு கட்சியின் கொள்கைகள் சிலவற்றை முன்வைத்துள்ளோம். தேசிய இனப்பிரச்சினைத்தீர்வில் முஸ்லிம்களின் பரிமாணம்; பிராந்திய ரீதியாக முஸ்லிம்களின் அதிகாரம்; தமிழ்-முஸ்லிம் மக்களின் அபிலாசைகள், கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கட்சியின் அரசியல் கோட்பாடுகள் என்பன தொடர்பான கொள்கைகளை முன்வைத்து ஆராய்ந்து வருவதாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் ஐ.தே.கவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அரசியல் நிறைவேற்று அதிகாரங்களை பயன்படுத்தி அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களை தனது கட்சிக்கு மாற்றுவதென்பது அநாகரிகமான அரசியல் செயற்பாடு என குற்றம் சுமத்திய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தமது கட்சிக்கும் இவ்வாறு நிகழக்கூடாது எனவும் சுட்டிக்காட்டினார். எனவே அரசின் தற்போதைய காய் நகர்த்தல்களை ஆராய்ந்து அரசுடன் இணைந்து செயற்பட புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்வதென முடிவெடுக்கப்படுமென ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (ச-5)

## வந்தாறுமூலையில்...

களைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் இதனையடுத்து படையினர் பதில் தாக்குதல் மேற்கொண்டதாகவும் ஊடக தகவல் மையம் தெரிவித்துள்ளது.

பிரதேசத்தில் இருந்து விடுதலைப்புலிகள் உறுப்பினரின் ஒருவரின் சடலத்துடன் ரி.56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கான 140 தோட்டாக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக ஊடக தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது. (ச-9)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.